# சிக்கலான இதய அறுவைச் சிகிச்சை: ஏழைப் பெண்ணுக்கு மறுவாழ்வு

## மியாட் மருத்துவமனை சாதனை




சிக்கலான இதய அறுவைச் சிகிச்சை மூலம் மறுவாழ்வு பெற்ற அபிநயாவுடன் (இடமிருந்து) மியாட் மருத்துவமனையின் நிர்வாக இயக்குநர் டாக்டர் பி.வி.ஏ. மோகன்தாஸ், டாக்டர் வி.வி.பாஷி, மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ்.

சென்னை, டிச.12: திருவாரூரைச் சேர்ந்த அபிநயாவுக்கு (25) சிக்கலான இதய அறுவைச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து சென்னை மியாட் மருத்துவமனை மருத்துவர்கள் மறுவாழ்வு அளித்துள்ளனர்.

இந்தியாவில் முதல் முறையாக செய்யப்பட்டுள்ள இந்த அறுவைச் சிகிச்சை தொடர்பாக மியாட் மருத்துவமனை இதய அறுவைச் சிகிச்சைப் பிரிவின் தலைவர் டாக்டர் வி.வி.பாஷி செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியதாவது:

"அபிநயாவுக்கு மூளைச் சாவுக்குள்ளான இளைஞரின் இதயத்தை தானமாகப் பெற்று, சென்னை அரசு பொது மருத்துவமனையில் முதன்முறையாக 2009-ஆம் ஆண்டு இதய மாற்று சிகிச்சை செய்யப்பட்டது. இந்த நிலையில் கடந்த 20 தினங்களுக்கு முன்பு, அதாவது நவம்பர் 22-ஆம் தேதி தீவிர மார்பு வலி-மூச்சுத் திணறல் பிரச்னைகளுடன் மியாட் மருத்துவமனைக்கு அபிநயா வந்தார்.

உடனடியாக அவருக்கு சி.டி. ஸ்கேன், ஆஞ்சியோகிராம் உள்ளிட்ட அனைத்து மருத்துவப் பரிசோதனைகளும் செய்யப்பட்டன. பரிசோதனை முடிவில் மகாதமனியில் வீக்கம் மற்றும் இதயத்தின் முதன்மை வால்வில் ரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

ஏற்கெனவே இதய மாற்று சிகிச்சை செய்யப்பட்டதால், இதயத்தை உடல் நிராகரிக்காமல் இருக்க அபிநயா மருந்துகள் சாப்பிட்டு வந்ததால், பெரிய அளவிலான இதய அறுவைச் சிகிச்சையை பாதுகாப்புடன் புதிய முறையில் செய்வது குறித்து திட்டமிடப்பட்டது.

உடல் குளிரூட்டப்பட்டது: அபிநயா காலின் மேல் பகுதியில் இரண்டு குழாய்களை நுழைத்து, இதய-நுரையீரல் இயந்திரத்துடன் இணைக்கப்பட்டது: மேலும் மார்புச் சுவருடன் மகாதமனி வீக்கம் ஒட்டியிருந்ததால் மார்பைத் திறந்து அறுவைச் சிகிச்சை செய்ய ஏதுவாக அவரது உடல் குளிரூட்டப்பட்டது. இவ்வாறு செய்த பிறகு பழுதடைந்த வால்வு அகற்றப்பட்டு இதய வால்வு சரி செய்யப்பட்டது. பாதிப்புக்குள்ளான மகாதமனியின் பகுதி கிராப்ட் முறையில் சரி செய்யப்பட்டது.

அவர் தற்போது நன்றாகக் குணமடைந்து விரைவில் வீடு திரும்ப உள்ளார்" என்றார் டாக்டர் வி.வி.பாஷி.